RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt21438

# பெண் எழுத்தாளர்களின் சிறுகதைகளில் பெண்விடுதலைக் குரல்கள் (இரா. பிரேமாவின் பெண்ணியக் கதைகள் தொகுப்பை முன்வைத்து)

பா. இரவிக்குமார் [அ, *]

[அ] சுப்பிரமணிய பாரதியார், தமிழ்மொழி மற்றும் இலக்கியப்புலம், புதுவைப் பல்கலைக்கழகம், புதுச்சேரி-605014, இந்தியா

# Women's Liberation Voices in Short Stories by Women Writers (Presenting R. Prema's collection of feminist stories)

**B. Ravikumar** [a, *]

[a] Subramania Bharathi School of Tamil, Language and Literature, Pondicherry University, Puducherry-605014, India.

* Corresponding Author: paa.ravikumar1@gmail.com

Received: 22-07-2021
Revised: 05-10-2021
Accepted: 18-10-2021
Published: 30-10-2021

**ABSTRACT**

When we study the history of Tamil literature for 2000 years, women writers have recorded the life, culture and internal and external expressions of the Tamil land as well as the male writers. Numerically, there are very few works by women. However, women poets are the symbol of the Tamil language. The list of Tamil women poets is long. But there is no denying the fact that the patriarchal thinking prevailing in Tamil society has narrowed the space of women in the kitchen in the corner of the house. Girls were denied education. This article is based on some of the stories in Prema's 2004 collection Feminist Stories.

**Keywords:** Women Writers, Prema, Feminist Stories, Women Poets

## முன்னுரை

இரண்டாயிரமாண்டு தமிழ் இலக்கிய வரலாற்றை ஆராயும்போது ஆண் படைப்பாளர்களுக்கு நிகராகப் பெண் படைப்பாளிகளும் தமிழ் நிலத்தின் வாழ்வியலை, பண்பாட்டை, அக - புற வெளிப்பாடுகளைப் பதிவு செய்துள்ளனர். எண்ணிக்கை அளவில் பெண்களின் படைப்புகள் மிகச் சொற்பம் தான். எனினும் தமிழ் மொழியின் அடையாளமாகவே பெண்பாற்புலவர்கள் திகழ்கின்றனர். ஔவையார், காக்கைப் பாடினியார், இளவெயினியார், வெறிபாடிய காமக் கண்ணியார், கீரன் எயிற்றியார், ஒக்கூர் மாசாத்தியார், காவற்பெண்டு, நக்கண்ணையார், நப்பசையார், வெள்ளிவீதியார், பாரி மகளிர், ஆண்டாள், காரைக்கால் அம்மையார் எனத் தமிழ்ப் பெண்பாற்புலவர்களின் பட்டியல் நீளமனாது. ஆனால், தமிழ்ச் சமூகத்தில் நிலவிய ஆணாதிக்கச் சிந்தனை, வீட்டின் மூலையில் சமையறைக்குள் பெண்களின் வெளியைக் குறுக்கிவிட்டது எனும் உண்மையை யாரும் மறுப்பதற்கில்லை. பெண்ணுக்குக் கல்வி மறுக்கப்பட்டது. சுயசிந்தனை, சுய தேர்வு, உரிமை, சுதந்திரம் என்பதெல்லாம் கானல் நீராகத்தான் இருந்தது. இத்தகைய சூழலில் பக்தி இலக்கிய காலகட்டத்தில் ஆண்டாள் காரைக்கால் அம்மையாருக்குப் பிறகு பெண் படைப்பாளிகள் உருவாகவேயில்லை. அந்த இடைவெளியை இட்டு நிரப்பியவர் என்ற பெருமை நாகூரைச் சேர்ந்த சித்தி ஜூனைதா

பேகம் என்ற பெண் எழுத்தாளரையே சாரும். 1929 ஆம் ஆண்டு தாருல் இஸ்லாம் இதழில் சித்தி ஜூனைதா பேகம் எழுதிய சிறுகதை தான் தமிழில் வெளிவந்த முதல் பெண் சிறுகதை எனலாம்.

இருபதாம் நூற்றாண்டில் நவீன தமிழ் இலக்கியப் பரப்பில் பெண் எழுத்தாளர்களின் பங்களிப்பு குறிப்பிடத்தகுந்த அளவில் பதிவு செய்யப்பட்டுள்ளது. அம்பை, உமா மகேஸ்வரி, எம்.பகீரதி, கிருத்திகா, குட்டி ரேவதி, சந்திரவதனா, சந்திரா இரவீந்திரன், சல்மா, சுகிர்தராணி, சு. தமிழ்ச் செல்வி, சே.கல்பனா, தமிழ்நதி, தி.பரமேசுவரி, நளாயினி தாமரைச்செல்வன், பாமா, புதிய மாதவி, தாட்சாயணி, தமிழச்சி தங்கபாண்டியன், மதுமிதா, ரஜினி பெத்துராஜா, வேதா இலங்காதிலகம், ஜெயந்திசங்கர், அ.ரோஸ்லின், ஈழவாணி, நிதா எழிலரசி போன்றோர் தமிழ் நவீன சிறுகதையில் குறிப்பிடதக்க பங்களிப்பை ஆற்றியுள்ளனர்.

இக்கட்டுரை, இரா. பிரேமா அவர்கள் 2004 ஆம் ஆண்டு தொகுத்த பெண்ணியக் கதைகள் என்னும் தொகுப்பில் இடம்பெற்றுள்ள கதைகள் சிலவற்றை அடிப்படையாக்க் கொண்டு எழுதப்பட்டுள்ளது.

## பெண்விடுதலைக் கருத்தாக்கம்

பெண்ணியம் அல்லது பெண் விடுதலை என்று பேசும்போது, ஒரே விதமான விடுதலை என்பது அனைத்துப் பெண்களுக்கும் சாத்தியமில்லை. வர்க்க அடிப்படையில் மேல்தட்டு வர்க்கம், நடுத்தர வர்க்கம், அடித்தட்டுவர்க்கம் என்று மனித சமூகத்தை மூன்று வகையாகப் பகுக்கலாம். இந்தியாவைப் பொறுத்தவரை, வர்க்கம் என்பதைவிடவும், சாதியும் மதமுமே ஆதிக்கம் செலுத்துகின்றன. அவ்வகையில், ஒரே வகையான பெண் விடுதலையை, பெண்ணியத்தைப் பேச இயலாது.

இரா. பிரேமா அவர்கள் தொகுத்துள்ள பெண்ணியக் கதைகளில் உஷா சுப்பிரமணியனின் அறிவுஜீவிகள் காதலிக்கிறார்கள், திலகவதியின் வதம், பாமாவின் பொன்னுத்தாயி, அனுராதாவின் வலி, முதலிய கதைகள் குறிப்பிடத்தக்கன. இக்கதைகள் யாவும் வெவ்வேறு வகையான பெண்ணியக் குரல்களைப் பதிவு செய்துள்ளன.

## மேல்தட்டுவர்க்கப் பெண்ணியக் குரல்

உஷா சுப்பிரமணியன் எழுதியுள்ள அறிவுஜீவிகள் காதலிக்கிறார்கள் எனும் கதை, இன்றைய தலைமுறையினரின் நவீன வாழ்வியலைப் பேசுகிறது. நகரம் சார்ந்த பெண்கள், குடும்ப எல்லைக்குள் சிறைப்பட்டு விடுவதை விரும்புவதில்லை. இக்கதையில் இடம்பெறும் ரீதா, குடும்ப வாழ்க்கையை விரும்பாதவளாகச் சித்திரிக்கப்பட்டுள்ளாள். ஆணுக்கு அடிமையாக வாழ்வது தன்னுடைய சுயத்தையும், முன்னேற்றத்தையும் அழித்துவிடுவதாக நம்புகிறாள். சமையல் செய்யவோ, குடும்ப உறுப்பினர்களைக் கவனிக்கவோ நேரம் ஒதுக்க அவள் தயாராக இல்லை. குழந்தைப் பெற்றுக் கொள்வதையும் அவள் விரும்பவில்லை. ஒரு விளம்பரக் கம்பெனியில் பணி புரியும் அவள், தற்செயலாகத் தன்னுடைய பள்ளிக்கால நண்பனான ஹரியைச் சந்திக்கிறாள். பெரு நகரத்தில் ஹரியைச் சந்திக்க, அந்த நட்பு காதலாகவும் மாறுகிறது. ரீதாவை மணந்து கொள்ள ஹரி முன்வரும்போது அந்தத் திருமண பந்தத்தை ரீதா

தவிர்க்கிறாள். பாலியல் உறவு கொள்வதற்கு அவள் தயங்கவில்லை. ஆனால், குடும்ப உறவையோ, கணவன் - மனைவி என்கின்ற பந்தத்தையோ அவள் அடியோடு வெறுப்பவளாகச் சித்திரிக்கப்பட்டுள்ளாள்.

> "ஒவ்வொரு விளையாட்டுக்கும் சில ரூல்ஸ் உண்டு. கல்யாணத்துக்கும் உண்டு. அந்த ரூல்ஸ் எதுவும் என்னைக் கட்டிப் போடறதை நான் விரும்பலை. அந்தக் கேமை வெற்றிகரமா விளையாடனும்னா நிறைய நேரம் செலவிடனும். உங்கம்மாவும், எங்கம்மாவும் அவங்க வாழ்க்கையில தொண்ணூறு சதவிகித நேரத்தைக் குடும்பத்துக்காக ஒதுக்கினாங்க. குடும்பம் சுமாராவாவது நடந்தது. என் வாழ்க்கையிலே தொண்ணூற்றி அஞ்சு சதவிகிதத்தை நான் என் வளர்ச்சி, என் தொழில், என் சந்தோஷம்னு திருப்தியாக இருந்தேன். கல்யாணத்துலே கிடைக்கிற திருப்தியைவிடப் பல மடங்கு திருப்தி கிடைக்குது. ஏன் தெரியுமா… இது நானா அடைந்தது… ஒருத்தரும் தந்ததில்லை. என்னால கல்யாணம் செய்து கொள்ளாமலே நானாக இருக்க முடியும். அன்னிக்குச் சமுதாய அங்கீகாரத்துக்காகப் பெண்களுக்குக் கல்யாணம் தேவைப்பட்டது. சார்ந்து நிற்காத பெண்களுக்குக் கிடைக்கிற சமுதாய அங்கீகாரமும் மதிப்பும் மிக மிக அதிகம்" (Prema, 2004)

ரீதாவின் குரலை, பெண்விடுதலைக்கான முழுமையான குரலாக அங்கீகரிக்க இயலாது. காரணம், இக்கதையில் இடம்பெறும் ரீதா பணிபுரிந்து நிறைய சம்பாதிக்கும் மேல்தட்டு வர்க்கத்தைச் சார்ந்தவள். பாலியல் உறவு என்பது ரீதாவிற்கு இயல்பான ஒன்று. ஆனால், இதே குரலை மற்றொரு கதையான வதம் (திலகவதி) என்னும் கதையில் காண்பதற்கில்லை (Panjaagam, 2007).

வதம் என்னும் கதையில் இடம்பெறும் கோமதி, நடுத்தர வர்க்கத்தைச் சார்ந்தவள். இக்கதை, நாட்குறிப்பு வடிவில் எழுதப்பட்டுள்ளது. இக்கதையில் லலிதா, கோமதி, மேனேஜர் முதலிய கதைமாந்தர்கள் இடம்பெற்றுள்ளனர். லலிதாவும் கோமதியும் கம்பெனியில் பணிபுரிகின்றனர். இக்கதையில் இடம்பெறும் மேனேஜர், தன்னுடைய அலுவலகத்தில் பணிபுரியும் பெண்களைக் குறித்து, வதந்தியைப் பொய்யாகப் பரப்பி, அவர்களைச் சங்கடத்திற்கு உள்ளாக்குகிறான். அவனுடைய வதந்திகளுக்கு அஞ்சி லலிதா வேலையைக் கைவிடுகிறாள். இக்கதையின் ஆசிரியர் திலகவதி, வேலைக்குச் செல்லும் பெண்கள், எதையும் எதிர்கொள்ள தைரியமற்று இருப்பதை லலிதா கதாப்பாத்திரம் மூலமாக விமர்சனம் செய்துள்ளார். ஆனால் இக்கதையில் இடம்பெறும் கோமதி, மேனேஜரை நேருக்கு நேராக எதிர்கொள்கிறாள். பெண்களுக்கு எதிராக வதந்திகளைப் பரப்பினால் எம்.டி, சேர்மன் முதலியவர்களிடம் புகார் கொடுப்பேன் என்றும் போராடுவேன் என்றும் எச்சரிக்கிறாள். மேனேஜர் வேறு வழியில்லாமல் பணிவுடன், இதைப் பற்றி யாரிடமும் சொல்ல வேண்டாம் என்று கெஞ்சுகிறான்.

"வெளியே இன்னும் பட்டாசுச் சத்தம் கேட்டுக் கொண்டிருக்கிறது. எங்கிருந்தோ புறப்பட்ட ராக்கெட் வாணம் உயரத்தில் வெடித்தது. ஒளிப்பூக்களாய் தீக்கங்குகளைச் சொரிகிறது. தீ பார்க்கவும் அழகு. பழகவும் அழகு.

தீயே நின்னைப் போல எமது உள்ளம் சுடர் விடுக.

தீயே நின்னைப் போல எமது அறிவு கனலுக" (Prema, 2004)

என்ற வரிகளுடன் கதை நிறைவடைந்துள்ளது. இங்கே தீ என்று திலகவதி குறிப்பிடுவது பெண்களைத்தான்.

பாமாவின் பொன்னுத்தாயி சிறுகதையில், அடித்தட்டு வர்க்கப் பெண்ணியக் குரல் ஒலிப்பதைக் காண முடியும். இக்கதையில் இடம்பெறும் பொன்னுத்தாயி, படிக்காதவள். ஆனாலும், எதையும் எதிர்கொள்ளத் தயாராக இருப்பவள். சுயமாக நிற்பதற்குத் தயங்காதவள். கணவன் குடித்துவிட்டுத் தன்னை அடித்துத் துன்புறுத்தியபோதும், கூலியையும் பிடுங்கிச் சென்றபோதும் குழந்தைகளை நிர்க்கதியாக விட்டுவிட்டுப் பொறுப்பில்லாமல் அலைந்தபோதும் அவள் அழுது புலம்பவில்லை. தன்னை அடித்து உதைத்து, மீண்டும் பிள்ளைகளை வளர்க்க வேண்டுமே என்ற காரணத்திற்காகத் திரும்ப வரும் கணவன் குறித்து அவள் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கிறாள். மீண்டும் வாழ விரும்பும் கணவன் மூக்காண்டியிடம் பொன்னுத்தாயி கூறும் வார்த்தைகள் அடித்தட்டு வர்க்கப் பெண்களின் பெண்ணியக் குரலாக ஒலிக்கிறது.

"இம்புட்டு நேரமும் பேசாமக் கேட்டுக்கிட்டிருந்த பொன்னுத்தாயி சொன்னா: பிள்ளைகளக் கொண்டாந்து எதுக்கு இங்க உடனும்ங்கற? ஒம்பிள்ளைகள நீயே வச்சுக் காப்பாத்து. எனக்கு நீயும் வேண்டாம்; ஒன்னால வந்த பிள்ளைகளும் வேண்டாம். பெத்தவாதான் பிள்ளைகள வளர்க்கனும்னு சட்டமா என்ன? இங்க கூட்டியாராத, இனி இந்தப் பக்கமே நீ தலயக் காட்டாத. சொல்லிட்டேன் ஆமா" (Prema, 2004)

பொன்னுத்தாயி என்னும் பாத்திர வார்ப்பை பாமா, மிக அற்புதமாகச் சித்திரித்துள்ளார். குழந்தைகளிடம் அன்பு பாராட்டாதவள் அல்ல பொன்னுத்தாயி. இக்கதையில் வாயில்லா சீவன்களாக இருக்கும் ஆட்டுக்குட்டிக்குக் கூட அன்பு பாராட்டுபவள்தான். ஆடுகள் பசித்திருப்பதைக் கூட சகித்துக் கொள்ளாதவள். ஆனால், குழந்தை வளர்ப்பு என்று வரும்போது அதில் ஆணுக்கும் பொறுப்பு இருக்கிறது என்பதை இயல்பாக வலியுறுத்துகிறாள். படிப்பு மறுக்கப்பட்ட பொன்னுத்தாயியின் விடுதலைக் குரல் ரீதாவின் குரலிலிருந்து வேறுபட்டது. தாலியை விற்று, வியாபாரம் செய்யும் துணிவு பொன்னுத்தாயிக்கு இருப்பதைக் கதையின் முடிவு தெளிவுபடுத்துகிறது.

## முடிவுரை

பெண்விடுதலை என்பது பன்முகத்தன்மை வாய்ந்தது. வாழ்க்கையும் உணர்வுகளும் மனிதர்களுக்கிடையே வேறுபட்டு இருப்பதால் ஒரேவிதமான பெண்ணியத்தைப் பேச முடியாது. ஐரோப்பியப் பெண்ணியச் சிந்தனைகளிலிருந்து வேறுபட்டு இருப்பவை இந்தியப் பெண்ணியம். இந்தியப் பெண்ணியத்தில் கூட ஒரே வகையான விடுதலைக் குரலை எதிர்பார்க்க முடியாது. பெண்களின் வாழ்க்கை வர்க்கத்திற்கு வர்க்கம் மாறுபட்டிருப்பதால் பன்முகத்தன்மை வாய்ந்த பெண்ணியத்தையே பெண்ணியக் கதைகள் வலியுறுத்துகின்றன.

## References

Prema, R. (2004) Penniya Kathaikal, Kaviya Pathippagam, Chennai, India

Panjaagam, K. (2007) Pen Moli Padaipu, Kavya Pathipagam, Chennai, India

**Funding:** NIL
**Acknowledgement:** NIL
**Conflict of Interest:** NIL

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The author 2021. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License